# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 118 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 26.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா

## சிஜேபி போராட்டக் களத்தில் கொண்டாட்டம்

## "நாம் சாதித்துவிட்டோம்..." சிஜேபி நிறுவனர் அபிஜித் தீப்கே உற்சாகம்



புதுடெல்லி: மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதையடுத்து, டெல்லியில் சிஜேபி போராட்டக்களத்தில் இளைஞர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். "டெல்லி ஜந்தர் மந்தரிலும், நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை தேசவிரோத சக்திகள் தங்கள் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவதை அனுமதிக்க மாட்டேன்; மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு எனது ராஜினாமாவை பிரதமருக்கு அனுப்பியுள்ளேன்" என்று தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவுக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், தர்மேந்திர பிரதான் தனது ராஜினமாவை அறிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சீர்திருத்தத்திற்காக நான் என்னை அர்ப்பணித்துள்ளேன். ஒரு வலிமையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட கல்வி முறையே ஒரு வலிமையான தேசத்தின் அடித்தளம் என்று நான் எப்போதும் நம்பி வந்துள்ளேன்.

நாட்டின் இளைஞர்களின் விருப்பங்கள், உணர்வுகள் மற்றும் நியாயமான எதிர்பார்ப்புகளை நான் ஆழ்ந்து மதிக்கிறேன். இந்தியாவின் இளம் தலைமுறையின் கனவுகளை நனவாக்குவது, அரசியல் மற்றும் சமூக வாழ்வில் நம் அனைவரின் தார்மிகக் கடமையாக இருந்து வருகிறது. பிரதமரின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ் தேசத்துக்கு சேவை செய்ய எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பிற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மே 3, 2026 அன்று நடைபெற்ற நீட்-யுஜி (NEET-UG) தேர்வில் முறைகேடுகள் கண்டறியப்பட்டன. இதைக் கவனத்தில் கொண்டு உடனடியாக இந்திய அரசு, விசாரணையை சிபிஐ-யிடம் (CBI) ஒப்படைத்து, தேர்வை ரத்து செய்து, மறு அட்டவணையை வெளியிட்டது. அடுத்த ஆண்டு முதல் கணினி அடிப்படையிலான தேர்வு (CBT) முறையில் தேர்வை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான தேர்வு தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்வதே எங்கள் முன்னுரிமையாக இருந்தது. இந்த நோக்கத்திற்காக, இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், மாவட்ட நிர்வாகம் ஆகியவை முக்கியப் பங்காற்றின. மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் ஜூன் 21, 2026 அன்று தேர்வு நிறைவடைந்தது.

முதல் நாளிலிருந்தே இதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். இதில் இருந்து நான் ஒருபோதும் பின்வாங்கவில்லை. எந்தவொரு திறமையான மாணவரின் எதிர்காலமும் தேர்வு மாஃபியாவால் பாதிக்கப்படக் கூடாது என்றும், எந்தவொரு மாணவருக்கும் அநீதி இழைக்கப்படுவதை அனுமதிக்கக்கூடாது என்றும் நான் உறுதியாக இருந்தேன்.

ஜூலை 16 அன்று அறிவிக்கப்பட்ட நீட்-யுஜி (NEET-UG) தேர்வு முடிவுகள் திருப்திகரமாக இருந்தன. ஏழ்மையான பின்னணியைச் சேர்ந்த பல திறமையான மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

இருப்பினும், பொறுப்புள்ளபதவிகளில்இருந்த சில தனிநபர்கள், பல மாணவர்களைத் தவறாகவழிநடத்த முயன்றனர். இது எனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியது.

நமது ஜனநாயகத்தின் சக்தியின் மீது எனக்கு எப்போதுமே அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. இளைஞர்களின் விருப்பங்கள், கனவுகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நான் ஆழ்ந்து மதிக்கிறேன். அவர்கள் இந்தியாவின் எதிர்காலம் மட்டுமல்ல, ஒரு புதிய; வளர்ச்சியடைந்த இந்தியாவின் சிற்பிகள்.

கடந்த 10 நாட்களில் நடந்த நிகழ்வுகளால் நான் வருத்தமடைகிறேன். இது எனக்கு தனிப்பட்ட கவுரவம் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. இந்தியாவின் இளைஞர் சக்தியே இந்த நாட்டின் உண்மையான பலம். நாட்டின் இளைஞர்கள் மாயைகளின் தீய வட்டத்திற்குள் வீழ்வதை நான் அனுமதிக்க



மாட்டேன், இதுவே எனது உறுதி.

ஜந்தர் மந்தரிலும் நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை தேசவிரோத சக்திகள் தங்கள் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவதை நான் அனுமதிக்க மாட்டேன். நாட்டின் ஒற்றுமை பேணப்பட வேண்டும்.


இந்தியாவில் ஒரு மாணவரின் எதிர்காலம் கூட சட்டச் சிக்கல்களில் சிக்கக்கூடாது.

நமது பிள்ளைகள் தங்கள் நேரத்தை படிப்பிற்கு அர்ப்பணித்து, தங்கள் தொழில் வாழ்க்கையை உருவாக்குவதில்கவனம்செலுத்த வேண்டும். இதை மனதில் கொண்டு, எனது ராஜினாமாவை பிரதமருக்கு அனுப்பியுள்ளேன். பிரதமரின் வழிகாட்டுதலுக்கும், நம்பிக்கைக்கும், தொடர்ச்சியான ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சரவையில் உள்ள எனது மதிப்புக்குரிய சக ஊழியர்களுக்கும், அமைச்சகத்தின் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், என்னுடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேசத்துக்கு சேவை செய்வதே என் வாழ்வின் தலையாய முன்னுரிமை. நான் எப்போதும் அதற்கே என்னை அர்ப்பணி

புரி ஜெகந்நாதரின் அருளால், இந்திய மக்களின், ஒடிசா மக்களின், நாட்டின் இளைஞர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக, என்னால்இயன்றஎல்லா வழிகளிலும் என்னை தொடர்ந்து அர்ப்பணித்துக் கொள்வேன்" என்று தெரிவித்துள்ளார்.

தர்மேந்திர பிரதானின் ராஜினமாவை அடுத்து, டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அரசியலில் இருந்து விலகுறேன்.. பாமக நிறுவனர் ராமதாஸ் அறிவிப்பு



திண்டிவனம்: இன்று முதல் அரசியல் துறவறம் பூணுவதாக தனது 88வது பிறந்த நாளில் பாமக நிறுவனர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

ராமதாசின் 88வது பிறந்த நாள் விழா, திண்டிவனத்தை அடுத்த கோனேரிக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள சரஸ்வதி கல்லூரியில் நடைபெற்றது. இதில், ராமதாஸின் மனைவி சரஸ்வதி, மகன் அன்புமணி, மருமகள் சவுமியா அன்புமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய ராமதாஸ், "இன்று எனக்கு 88 ஆவது வயது ஆரம்பமாகிறது. இந்த தருணத்தில் நான் ஒரு நல்ல செய்தியை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். இன்று முதல் நான் அரசியல் துறவறம் பூணுகிறேன். அரசியல் துறவறம் என்று சொன்னால், அரசியலே பேச மாட்டேன், அரசியலுக்கு வழிகாட்ட மாட்டேன். வருபவர்களைப் பார்ப்பேன். நலம் விசாரிப்பேன். அவ்வளவுதான். அந்த வகையில் அரசியலில் நான் தலையிடமாட்டேன். அதை அன்புமணி பார்த்துக் கொ ள்வார். அவரது துணைவியாரும் அவருக்குதுணையாகஇருப்பார். நாங்களும் துணையாக இருப்போம்.

என்னைப்பார்க்கவருபவர்கள் நலம் விசாரிக்க வரலாம். அரசியல் பேசுவதற்கு ஏதும் இல்லை. ஏனென்றால், நான் இன்றிலிருந்து அரசியல் துறவறம் மேற்கொள்கிறேன்.

இந்த கல்விக் கோயில் மேலும் சிறப்பாக மிகப்பெரிய அளவில் வளர நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவே நீங்கள் எனக்கு செலுத்தும் காணிக்கையாக கருதுவேன். அந்த வகையில் இந்த மனநிறைவோடு, இந்த வளாகங்களை திறந்து வைத்திருக்கிறோம்.

சரஸ்வதி அம்மையார் போட்ட அந்த விதை இன்று மிகப்பெரிய ஆலமரமாக வளர்ந்திருக்கிறது. இதற்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

உங்களோடு நீண்ட நேரம் பேச வேண்டும் என்று விரும்பினாலும், தலைச்சுற்றல் வியாதி இன்றும் எட்டிப்பார்க்கிறது. ஆனாலும், அதை சமாளித்துக்கொண்டு உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் நான் இங்கு வந்திருக்கிறேன்.

உங்களுக்கும் எனக்கும் உள்ள உறவு எப்போதும் மாறாது. அது நீடித்துக்கொண்டே இருக்கும். என்னைப் பார்க்க வாருங்கள். ஆனால், தொந்தரவு செய்யாதீர்கள்." என தெரிவித்தார்.

## தொடரும் காவல் மரணங்கள்; முதல்வர் விஜய் வாய் திறப்பது எப்போது? தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி

சென்னை: தமிழகத்தில் காவல் மரணங்கள் தொடரும் நிலையில் முதல்வர் விஜய் எப்போது இது குறித்து மவுனம் கலைப்பார் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வினவியுள்ளார். நாகர்கோவில் சிறைக்குள் சபரிவர்மன் என்றவிசாரணைக்கைதி அடித்து கொல்லப் பட்டதாகஎழுந்தசர்ச்சை அடங்கு வதற்குள் தூத்து க்குடியில் அருணாச்சலம் எனும் விசாரணை சிறைவாசி காவல் நிலையத்தில் வைத்து அடித்து கொல்லப் பட்ட சம்பவம்



அதிர்வ லை களைக் கிளப்பியுள்ளது.

இந்நிலையில், இதற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். அந்த வரிசையில், தமிழகத்தில் காவல் மரணங்கள் தொடரும் நிலையில் முதல்வர் விஜய் எப்போது இது குறித்து மவுனம் கலைப்பார் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வினவியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில் "எதிர்க்கட்சியாக இருக்கும் போது, "Sorry சொன்னால் போதுமா?" என என்னைப் பார்த்து வீராவேசமாக கேட்டவர், முதல்வரானதும்அதைக் கூடசெய்யத்துணிவின்றி எங்கு ஒளிந்து கொண்டிருக்கிறார்? Accountability, Apology முதல்வருக்கு பிடிக்காத வார்த்தைகளின் பட்டியலில் இருக்கிறதா

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்லக் கூட மனமிரங்காத படுபாதக தவெக அரசுக்கு வன்மையான கண்டனங்கள்! என்று குறிப்பிட்டு ள்ளார்.

மூன்று மாதத்தைக் கூட நிறைவுசெய்யாத தவெக ஆட்சியில் 4 காவல் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. எப்பேர்ப் பட்ட குற்றவாளியாக இருந்தா லும் அரிதான வழக்குகளுக்கே மரண தண்டனை வழங்கப்படுகிறது.

எந்த குற்றமிழைத்தவரா யினும் அவருக்கான தண்டனையை நீதிமன்றத்தின் மூலமே பெற்றுதர வேண்டும். காவல் துறை எதேச்சதிகாரப் போக்கோடு குற்றம் சாட்டப்பட்டவரின் மீது தாக்குதல் நடத்துவதை ஒரு நாளும் ஏற்க முடியாது.

காவல் நிலையத்தில் படுகொலை செய்யப்பட்டஅருணாச்சலம்மரணத்தை கொலை வழக்காகப் பதிவுசெய்து, அதில்தொடர்புடைய குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டு ள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தரணி சர்க்கரை ஆலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மூன்று மாதங்களாக மாத ஊதியம் வழங்காத காரணத்தினால் தரணி சக்கரை ஆலை தொழிலாளர்கள் தொடர் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 2019 நவம்பர் மாதம் முதல் தொழிலாளர்களின் மாத சம்பளத்தில் பிடித்தம் செய்த வருங்கால வைப்பு நிதி தொகையை தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைக்க வேண்டும் மாத ஊதியம் தவறாமல் வழங்க வேண்டும் தொழிலாளர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர்கள் தொடர் உள்ளிருப்பு போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்

## பேரூராட்சி அலுவலகம் எதிரே தேங்கி நிற்கும் சாக்கடை நீரால் துர்நாற்றம் வீசுகிறது



கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சி அலுவலகம் எதிரே உள்ள சாலையில் தற்போது நான்கு வழி சாலை பணி நடைபெற்று வருகிறது இப்பணி தோய்வு இல்லாமல் நடைபெறுவதற்காக அவ் வழியைச் செல்லும் சாக்கடைநீரை தடுத்து நிறுத்தியுள்ளனர். இதனால் சாக்கடை நீர் தேங்கி துர்நாற்றம் வீசி வருவதால் வழியே செல்லும் பொதுமக்கள் மூக்கை பொத்திக்கொண்டு போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சாக்கடை நீரை மாற்று வழி மூலம் முழுமையாக அகற்ற வேண்டும் என பொதுமக்கள் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்துள்ளனர்.

### திட்டக்குடி அரசு பள்ளியில் பயங்கர தீ விபத்து

## பீரோ, பெஞ்ச், ஆர்.ஓ. வாட்டர் கருவி, நோட்டுப் புத்தகங்கள் எரிந்து சேதம்

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள ஒரு அறையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை திடீரென ஏற்பட்ட தீ விபத்தில், பீரோ, பெஞ்சுகள், ஆர்.ஓ.குடிநீர் சுத்திகரிப்பு கருவி, நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட பொருட்கள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தன.



திட்டக்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்நிலையில், பள்ளி வளாகத்தில் பூட்டப்பட்டிருந்த ஒரு அறையில் எதிர்பாராத விதமாக தீப்பிடித்தது. அறை பூட்டப்பட்டிரு ந்ததால் தீ வேகமாக பரவி, உள்ளே இருந்த அனைத்து பொருட்களும் தீக்கிரையாகின.

தகவலறிந்த திட்டக்குடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நிலைய அலுவலர் சண்முகம் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தண்ணீரைப் பீய்ச்சியடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து நேரத்தில் மாணவர்கள் அந்தப் பகுதியில் இல்லாததால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. இருப்பினும் பள்ளி சொத்துகளுக்கு கணிசமான சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து திட்டக்குடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளியின் முன்பக்க நுழைவுவாயில் 24 மணி நேரமும் திறந்தே இருப்பதாகவும், இதனால் இரவு நேரங்களில் சமூக விரோதிகள் பள்ளி வளாகத்துக்குள் நுழைவதாகவும் கூறப்படுகிறது. இந்த தீ விபத்து மர்ம நபர்கள் வைத்த தீயால் ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்து போலீஸார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, அரசு பள்ளிகளில் இரவு நேர காவல் ஏற்பாடுகளை பலப்படுத்த வேண்டும், இரவு காவலர் நியமிக்க வேண்டும், மேலும் பள்ளி வளாகங்களில் போலீஸார் தொடர் ரோந்துப் பணியில் ஈடுபட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு கொடுமுடி வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் , மற்றும் BLA2, BLC நிர்வாகிகளுக்கு ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநில நெசவாளர் அணி செயலாளர் S.L.T சச்சிதானந்தம், ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துக்குமார், சிவக்குமார், நடராஜன் மற்றும் பேரூர் செயலாளர்கள், பேருராட்சி தலைவர்கள் திமுக மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



★தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (25.07.2026) ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாவட்ட கண்காணிப்பு குழுவின் சார்பில் 45வயது மதிக்கத்தக்க மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்த மராட்டியத்தை சார்ந்த பெண்மணியை மாவட்டஆட்சியர் திரு.ரஞ்ஜீத்சிங், அவரது மாநிலத்திற்கு வழி அனுப்பி வைத்தார்.



செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலக்க முறை சேவைகள் துறை அமைச்சர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு ஆர். குமார் அவர்கள் மாவட்ட வளர்ச்சி கண்காணிப்பு குழு கூட்டத்திற்கு வருகை தந்தபோது தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா. அருணன் அவர்கள் உரசு ஊழியர்கள் கோரிக்கைகள் குறித்து விளக்கி பின்பு வாழ்த்து தெரிவித்து பட்டுவேட்டிபோர்த்திய மகிழ்ச்சியானதருணம்மேலும்பூந்தமல்லிசட்டமன்ற உறுப்பினர் ஆர்.பிரகாசம் என்கிற குட்டி அவர்கள், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அருண்குமார் அவர்கள், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் அவர்கள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் விஜய பிரபு அவர்கள், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ரவி அவர்கள் ஆகியோருக்கும் வாழ்த்து தெரிவித்தார் நிகழ்வில் கூட்டமைப்பின் மாநில துணைத் தலைவர் ஜே.ஸ்டாலின மற்றும் ஒன்றிய செயலாளர்கள் கடம்பத்தூர் விமல், திருப்பாச்சூர் விஜய் பிரபு ஆகியோர் உடன் இருந்தனர்

## வேப்பூரில் மக்கள் தொகை கணக்கெடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம், பேரணி

கடலூர் மாவட்டம் வேப்பூரில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான கருத்தரங்கில் வேப்பூர் வட்டாட்சியர் ராமர், தேர்தல் துணை வட்டாட்சியர் சுமதி, வருவாய் ஆய்வாளர் அண்ணபூரணி, முதுநிலை வருவாய் ஆய்வாளர் கோமதி, கிராம உதவி அலுவலர் ஐஸ்வர்யா மற்றும் தொழில்நுட்ப அலுவலர் மணி ஆகியோர் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அவசியம் குறித்து விளக்கமளித்து, விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினர்.

இதில்சாய்அப்போலோ கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் தீபா, சரண்யா, நளினி, கீர்த்தனா, சண்முகப்பிரியா, அன்பரசி, கனிமொழி, செல்வராணி, இந்திராபிரியதர்சினி, அம்சராணி உள்ளிட்டோர் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கேற்று விழிப்புணர்வு பேரணியில் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில் சாய்அப்போலோமுதன்மைக் கல்வி அலுவலர் ஆனந்தஜோதி நன்றி தெரிவித்தார்.



விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் பேரணி வேப்பூர் வட்டாட்சியர் ராமர் தலைமையில் சாய் அப்போலோ தனியார் கல்வி நிறுவன வளாகத்தில் நடை பெற்றது.

நிகழ்ச்சிக்கு டாக்டர் ஏ.ஆர். தங்கதுரை முன்னிலை வகித்தார். சாய் அப்போலோ கல்வி நிறுவன முதல்வர் தீபா வரவேற்றார்.

## ஈரோடு ஆர்.கே.வி. ரோட்டில் புதிய ரவுண்டானா திறப்பு


### தி சென்னை சில்க்ஸ் மற்றும் ஸ்ரீ குமரன் தங்க மாளிகை நிறுவனத்தின் சமூக பங்களிப்பு



ஈரோடு ஆர்.கே.வி. சாலையில் பல ஆண்டுகளாக இயங்கி வரும் தி சென்னை சில்க்ஸ் மற்றும் ஸ்ரீ குமரன் தங்க மாளிகை சார்பில் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, ஆர்.கே.வி. சாலையை மெருகூட்டும் வகையிலும் போக்குவரத்து சீரமைப்பிற்காகவும் ஸ்ரீ குமரன் தங்கமாளிகை எதிரே புதிய ரவுண்டானா அமைக்கப்பட்டது.

திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கண்ணபிரான் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்ட ஈரோடு மாவட்ட காவல்துறை குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தங்கவேல் மற்றும் ஈரோடு நகர காவல் நிலைய ஆய்வாளர் இளங்கோ ஆகியோர் ரிப்பன் வெட்டி புதிய ரவுண்டானாவை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முறைப்படி திறந்து வைத்தனர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த அழகிய ரவுண்டானாவால் அப்பகுதியே புதுப் பொலிவுடன் மிளிர்கிறது என்றும், போக்குவரத்து நெரிசல் குறைந்து பயனுள்ளதாக இருக்கும் என்றும் பொதுமக்கள் மற்றும் அப்பகுதி வணிகர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## கவரிங் நகை கொடுத்து ரூ.27,000 மோசடி செய்த பெண்



சென்னை: ராசியானது என நம்ப வைத்து கவரிங் நகையை தங்க நகை போல கொடுத்து பண மோசடியில் ஈடுபட்ட பெண்ணை போலீஸார் தேடி வருகின்றனர். சென்னை வியாசர்பாடி டி.டி. பிளாக் பகுதியைச் சேர்ந்தவர் சுதா (40).

நேற்று முன்தினம் மாலை வீட்டருகே உள்ள கடைக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது 2 வயது குழந்தையுடன் வந்த 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தன்னை ஈரோட்டைச் சேர்ந்தவர் என்றும், கணவருடன் ஏற்பட்ட பிரச்சினையால் அவர் கோபித்துக் கொண்டு சென்னை வந்துவிட்டதாகவும், அவரைத்தேடி சென்னையில் அலைந்துதிரிவதாகவும் கூறினார். மேலும் தன்னிடம் இருந்த பணம் முழுவதும் செலவாகிவிட்டதால், தன்னுடைய தங்க நகையை அடகு வைத்து பணம் பெற்றுத் தருமாறு சுதாவிடம் கேட்டுள்ளார். இதனை நம்பிய சுதா, அந்த பெண்ணை அருகிலிருந்த அடகுக் கடைக்கு அழைத்துச் சென்றார்.

இதையடுத்து அந்த பெண் சுதாவை வெளியே அழைத்துச் சென்று, அந்த நகை தனக்கு மிகவும் ராசியானது என்பதால் அடகு வைக்க விரும்பவில்லை என்றும், அதற்கு பதிலாக சுதா ரூ.27 ஆயிரம் கொடுத்தால் நகையை நீங்களே வைத்துக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார்.

இதை நம்பிய சுதா, வீட்டுக்குச் சென்று ரூ.27 ஆயிரத்தை எடுத்துவந்து அந்த பெண்ணிடம் கொடுத்துள்ளார். பணத்தை பெற்றுக் கொண்ட அந்த பெண், குழந்தையுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்.

பரிசோதனை செய்தபோது, அது கவரிங் நகை எனத் தெரியவந்தது. அப்போதுதான் அடகுக் கடையில் காண்பித்த நகை வேறு, சுதாவிடம் வழங்கிய நகை வேறு என்பது தெரிந்தது.

### கோவை சிவாஜி காலனி பகுதியில் உள்ள, வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இல்லத்தில்

## பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் சார்பாக இரவு சுவிஷேச சிறப்பு ஆராதனை நிகழ்ச்சி

### இதில் பலர் கலந்து கோண்டு கிறிஸ்தவ பாடல்கள் பாடி வழிபாடு நடத்தினர்

கோவை சிவாஜி காலனி பகுதியில் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் அலுவலகம் மற்றும் வீடு அமைந்துள்ளது இங்கு, பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் சார்பாக, இரவு சுவிஷேச சிறப்பு ஆராதனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இயேசுவின் அன்பின் ஊழிய போதகர் கனகராஜ், சிஸ்டர்பெரில், நாகர்கோவில் போதகர் வின்சென்ட், தலைமை மூப்பர் சந்திரன், மற்றும் சகோதர சகோதரிகள் கலந்து கொண்டு சிறப்பு ஆராதனை நடத்தினர். அப்பொழுது இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும், நோய் நொடியின்றி, வாழ வேண்டும். அதற்க்கு உண்டான அனைத்து தேவைகளையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்து தர வேண்டும் என்று கேட்டு கொள்ள பட்டது. தொடர்த்து தேவ துதி பாடல்கள், சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றது. பைபில் வாசகங்களில் உள்ள முக்கிய குறிப்புகளை எடுத்து போதகர் பாடல்கள் பாடி இந்த விஷேச ஆராதனையை வழி நடத்தினர். இதில் சிறப்பு செய்தி போதகர் ஜான் பீட்டர்,



செய்திகளை அளித்தார். விழாவினை ஒருங்கினைத்து போதகர் ஜெயக்குமார் வழி நடத்தினார். இக்கூட்டத்தில் பாஸ்டரம்மா ஜாய் ஜான் பீட்டர், கங்கா சந்திரன், மெரிஸி ஜெயக்குமார், அரசு போக்குவரத்து துறை ஓட்டுநர் ராஜேஷ், சத்யா, துரை ராஜ், மேரி, சிஸ்டர் எலிசபெத் சீலா, சுரேஷ், ஜெபா, வர்ஷா, வர்ஷினி, மோகன் ராஜா, ஞானமணி, வழக்கறிஞர் குமாஸ்தா லட்சுமி, ராதிகா சுனில் குமார், டேனிக்கா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



வாணாபுரம் அருகே அத்தியூர் கிராமத்தில் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்தார் மாண்புமிகு சமூக நீதித்துறை அமைச்சர் திரு.வன்னியரசு அவர்கள், இந்த விழாவில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி.பத்மாஜா அவர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளனர்



தமிழ்நாடு கைத்தறி துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி நேற்று (25.07.2026) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2, காந்திஜி ரோடு பகுதியில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் "நகர்ப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கினார். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை ஆணையாளர் செந்தில் குமார் ரத்தினம் , மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன் , மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை திருப்பரங்குன்றம் செய்தியாளர்கள் அறையை அமைச்சர் நிர்மல் குமார் ரிப்பன் வெட்டி குத்துவிளக்கு ஏத்தி திறந்து வைத்தார்



மதுரை திருப்பரங்குன்றம் செய்தியாளர்கள் அறையை தமிழக எரிசக்தி மற்றும் சட்டத்துறைஅமைச்சர்சிடி ஆர் நிர்மல் குமார் ரிப்பன் வெட்டி குத்துவிளக்கு ஏத்தி திறந்து வைத்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்தார் தொடர்ந்து அவர் பேசும்போது:

தாலுக்கா நொறுபவர்களுக்கு அரசு அங்கீகரா அட்டை வழங்குவது குறித்த கேள்விக்கு: 15 வருடங்களாக பத்திரிக்கையாளர்களுக்கு தேவையான சலுகைகள் சரியாக செல்லவில்லை அந்தந்த மாவட்ட ஆட்சியருக்கு இது சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. பத்திரிக்கையாளர் சங்கங்கள் வாயிலாக அவர்களுக்கு தேவைகளைசரிசெய்யமாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெல்லியில் நடைபெறும்மாணவர்கள் போராட்டம் குறித்த கேள்விக்கு: மாணவர்கள் போராட்டத்தில் நமது நிலைப்பாடு ஏற்கனவே சொன்னது போல் டெல்லியில் மாணவர்கள் தாக்கப்பட்டதற்கு கடுமையான கண்டனத்தை பதிவு செய்தோம். அறவழியில் நடைபெற்ற போராட்டத்திற்கு காவல்துறை நடத்திய தாக்குதல் கடும் கண்டனம்தெரிவித்தோம்.நம்முடைய நிலைப்பாடு நீட்டு வேண்டாம் தேவையற்றது, அது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அதிக சுமையை தரும் அதனால் எந்த பயனும் இல்லை, நீட் வேண்டாம் என்பது தான் நமது நிலைப்பாடு. போராட்டத்தில் நிறைய கோரிக்கைகள் உள்ளது டெல்லியில் நீட் தேர்வை சீரமைக்க வேண்டும். நம்முடைய நிலைப்பாடு நீட்டு வேண்டாம் தமிழகத்தில் அறவழியில் நடக்கும் போராட்டத்திற்கு தமிழக அரசு சார்பில் அனுமதியும் முழு பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் நீட் தேர்வை மறுசீரமைப்பு செய்யவும் ஒரு சிலர்நீட்தேர்வைவிளக்க வேண்டியும் போராடுகிறார்கள். தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்படுகிறது நம்முடைய நிலைபாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

தர்மேந்திர பிரதான் பதவி விலகுவது மட்டும் தீர்வு அல்ல நம்முடைய கோரிக்கைநீட்டு வேண்டாம். அவர் பதவி விலகினாலும் நீட் தொடரும். *நீட் க்கு எதிராக நடைபெறும் போராட்டங்களில் திமுக தலைவர்கள் பங்கேற்று நிறைய பேசி உள்ளார்கள், இதை பேசும் தகுதி திமுகவுக்கு கிடையாது.* அவர்கள் தான் இதை ஐந்து வருடத்தில் மோசமான சூழ்நிலைக்கு கொண்டு சென்றார்கள் திமுக ஆட்சிக்கு வரும்போது நீட் தேர்வை நிறுத்துவோம் என்று சொன்னார்கள் தவறான நம்பிக்கையை மக்களுக்கு கொடுத்து. இப்போது இறங்கி மேடையில் பேசுகிறார்கள் நீட் தேர்வை பற்றி பேசும் தகுதி திமுகவினருக்கு கிடையாது. நீட் தேர்வு வேண்டாம் என்பதில் உறுதியாக உள்ளோம் நேரமும் காலமும் வரும்போது அதற்கான முதல் குரலாக நம்மளுடைய குரல் இருக்கும்.

மேகதாது விவகா ரத்தில் கர்நாடகாவிற்கு முதல்வர் சொல்லக்கூடாது அனைத்து கட்சி கூட்டம் கூட்ட வேண்டுமென அன்புமணி கூறியது குறித்த கேள்விக்கு:

இந்த விவகாரத்தில் கடந்த ஒரு மாதமாக முதல்வர் பல கட்ட ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். என்ன செய்ய வேண்டுமோ அதை ஆக்கபூர்வமாகசெய்ய வேண்டும் திமுக வெறும் கடிதம் மட்டும் எழுதிவிட்டு பின்னாடி துரோகம் செய்தது போல் விஷயங்கள் இருக்காது. விவசாயிகளுக்கு தேவையான தண்ணீர் கிடைக்க வேண்டும் அதேசமயம் நம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முதல்வர் வலிமையாக எடுப்பார். நம்மளை தவிர வேற யாரும் எடுக்கவும் முடியாது

விவசாயிகளுக்குகாப்பீடு வழங்குவது குறித்த கேள்விக்கு : விவசாயிகளுக்கு:

கடந்த 15 வருடங்களாக மிகவும் மோசமாக உள்ளது காப்பீடுகளுக்காக விவசாயிகள் அலைக்கழிக்கப்பட்டுள்ளனர். 2006க்கு பிறகு காப்பீடுகள் சரியாக விவசாயிகளுக்கு போய் சேரவில்லை. அதனை சீரமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. எவ்வளவு விவசாயிகள் காப்பீடு பெற்றுள்ளார்கள் என்ற விவரம் சரியாக இல்லை அதை சீரமைக்க வேண்டும். விவசாயிகளுக்கு என்ன தேவையோ அது முதல்வர் வாயிலாக கிடைக்கும். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை திறப்பு குறித்த கேள்விக்கு:

மதுரை எய்ம்ஸ் சம்பந்தமாகதமிழக அரசின் சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டுள்ளது. விரைவில் அதை துவக்க வேண்டும் அதேபோல் மதுரை மருத்துவக் கல்லூரிமதுரைஅரசுமருத்துவமனை விரிவாக்கம் செய்யும் பணியும் துவக்கி உள்ளோம்.

ஜனநாயகம் திரைப்படத்தை பார்த்துவிட்டு அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கண்ணீர் விடும் காட்சிகள் பரவுவதும் எதிர்க்கட்சிகள் விமர்சனம் குறித்த கேள்விக்கும்:

எங்கள் தலைவருடைய மூன்று வருடம் பயணத்தை பார்க்கிறோம் எங்க மனதில் ஓடினது அவருடைய கடுமையான பயணம் போராட்டம் எவ்வளவு பிரச்சனைகள் சந்தித்தார். அது அத்தனையும் தாண்டி இந்தபடம்மிகப்பெரிய அளவில் வெளியாகி உள்ளது. இந்த படத்தை நிப்பாட்ட நினைத்த அனைத்து தீய சக்திகளுக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அவர் முதல்வரான பிறகு அதைப் பார்க்கும் ஒரு வாய்ப்பு அதை பார்க்கும்போது மிகவும் வித்தியாசமாக இருந்தது. ரசிகர்கள் கட்சிக்காரர்கள் படத்தை பார்க்கும் போது முதல்வருடைய மூன்று வருட போராட்டம் அதுதான் மனதில் வந்ததுஅதனால்இதனை சாதாரணபடமாகபார்க்கவில்லை.

விருதுநகரில் ஜனநாயகம் திரைப்படம் திரையிடும் போது விஜயபிரபாகரன் தோல்விகுறித்துவீடியோ திரையிடப்பட்டதாக வரும் சர்ச்சை கொடுத்த கேள்விக்கு:

அது குறித்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் யாரையும் சொல்லும் நோக்கத்திற்காக செய்யவில்லை அங்கிருக்கும் நிர்வாகிகள் யாரோ தவறாக செய்திருப்பார்கள் சட்டமன்ற உறுப்பினருக்கு இதில் பெரிய உடன்பாடு இல்லை நிர்வாகிகள் தெரியாமல் போட்டு இருப்பார்கள் எம்எல்ஏக்கும் அதுக்கும் தொடர்பில்லை அது தெரிவிக்கவும் பட்டுள்ளது என்றார்.

# கோவையில் மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை முறைகள் குறித்த மருத்துவ கருத்தரங்கம் துவக்கம்

## ராயல் கேர் மருத்துவமனையில் இரண்டு நாட்கள் நடைபெறும்

## இதில்,உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து மருத்துவ நிபுணர்கள் பங்கேற்பு



கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் மருத்துவ மனையில் மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை கருத்தரங்கம் நடைபெற்றது...

இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இதற்கான துவக்க விழா, மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் பட்டாபி ராமன், அர்ஜூன் மற்றும் மகாதேவன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது..

இதில், ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மாதேஸ்வரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.

இரு நாட்கள் நடைபெறும் இந்த கருத்தரங்கில் தமிழகம் மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில்இருந்துநுரையீரல் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் கலந்து கொண்டு,.நுரையீரல் மற்றும் ப்ளூரா தொடர்பான நவீன சிகிச்சை முறைகள், புதிய தொழில்நுட்பங்கள், சவாலான நோய்களுக்கான தலையீட்டு சிகிச்சைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விளக்கவுரையாற்றுகின்றனர்.

முன்னதாகசெய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் மாதேஸ்வரன், இதுபோன்ற கருத்தரங்குகள் இளம் தலைமுறை மருத்துவர்களுக்கு சமீபத்திய மருத்துவ முன்னேற்றங்களையும், மேம்பட்ட நுரையீரல் தலையீட்டு சிகிச்சை முறைகளையும் அறிந்து கொள்ள சிறந்த வாய்ப்பாக அமையும் என்றார்.

மேலும்,தற்போது சுற்றுச்சூழல் மாசுபாடு அதிகரித்து வருவதால் நுரையீரல் தொடர்பான நோய்களும் கணிசமாக உயர்ந்து வருவது உண்மைஎன்றும்,காற்று மாசுபாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதுஅரசின்பொறுப்பு மட்டுமல்ல, ஒவ்வொரு தனிமனிதரின் சமூகப் பொறுப்பும் ஆகும் என அவர் வலியுறுத்தினார்...

துவக்க விழாவில்,ராயல் கேர் மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் பரந்தாமன் சேதுபதி, தலைமை செயல்பாட்டு அலுவலர் மணி செந்தில் குமார், மூத்த பொது மேலாளர் வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நந்தா பொறியியல் கல்லூரிக்கு உயர்தர "ஏஏ" சான்றிதழ் அந்தஸ்து



ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் மத்திய அரசு கல்வி அமைச்சத்தின் வழிக்காட்டு தல்படி ஈரோடு பிராந்தியத்திற்கான "சுவயம்-என்.பி.டி.ஈ.எல்" ஆன்லைன் படிப்பிற்கான மையம் செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தின் மூலம் நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் மாத காலங்களில் 2300 க்கும் மேற்பட்ட மாணவர்களும், பேராசிரியர்களும் ஐ.ஐ.டி கள் மூலம் நடத்தப்படும் வெவ்வேறான பாடங்களை தேர்வு செய்து படிப்பினை மேற்கொண்டார்கள்.இதற்காகநடத்தப்பட்ட இறுதி பருவத் தேர்வில் "கிரேடுகள்" முறையில் 27 முதலிடங்கள், 242 தங்கம், 357 வெள்ளி பங்களிப்புகள் உட்பட 1752 மாணவர்களும், பேராசிரியர்களும் அதிக மதிப்பெண்களுடன் வெற்றிப்பெற்று சாதனைப் படைத்தார்கள்.

இவர்களின் சாதனைக்கு சிறந்ததொரு கற்றல் சூழலினை ஏற்படுத்திக் கொடுத்து திறம்பட செயல்பட்ட "ஈரோடு பிராந்தியத்திற்கான "சுவயம்-என்.பி.டி.ஈ.எல்" ஆன்லைன் படிப்பிற்கான மையம்" என்கிற முறையில் சென்னை ஐ.ஐ.டி வளாகத்தில் மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நந்தா பொறியியல் கல்லூரிக்கு "ஏஏ" தரச்சான்றிதழினை வழங்கி அங்கீகாரம் செய்து சிறப்பித்தது.

மேலும், இந்தியாவில் செயல்பட்டு வரும் 8740க்கும் மேற்பட்ட "சுவயம்-என்.பி.டி.ஈ.எல்" மையங்களில் முதல் 200 கல்வி நிறுவனங்களுக்குள் 88 வது இடத்தினை தக்கவைத்து சாதனை பெறுவதற்கு உறுதுணையாகசெயல்புரிந்தகல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ்.ரகுபதி மற்றும் மையத்தின் ஒருங்கிணைப்பாளரும், புலமுதல்வருமான முனைவர் ஈ.கே. மோகன்ராஜ் ஆகியோருக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி சண்முகன் தனது பாராட்டினை தெரிவித்தார்.

சென்னை ஐ.ஐ.டி நிறுவனமானது கடந்த நான்கு பருவங்களாக தொடர்ச்சியான முறையில்'ஏ'சான்றிதழ்வழங்கி வந்த நிலையில் ஐந்தாவது பருவத்தேர்வில் "ஏஏ" தரச்சான்றிதழினை வழங்கி அங்கீகாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் "ஏஏ" தரச்சான்றிதழினை பெற உதவி புரிந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே.வேலுசாமி ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து ஊக்கப்படுத்தினார்கள்.

# கோவையில் நடைபெற்ற தி கிராண்ட் மோட்டோ ஃபெஸ்ட் நிகழ்ச்சி

## ஆடி சிறப்பு தள்ளுபடியில் ஏராளமான சலுகைகள் வழங்கப்படுவதாக கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள் தகவல்



கோவையில் கார் மற்றும் இருசக்கர வாகன ஆர்வலர்களை ஒருங்கிணைக்கும் வகையில் ஏட் வேவ்ஸ் அட்வர்டைசிங் மற்றும் புரோசோன் மால் இணைந்து நடத்திய 'கோவை தி கிராண்ட் மோட்டோ ஃபெஸ்ட்' நிகழ்ச்சி, ப்ரோசோன் மால் வளாகத்தில் நடைபெற்றது. ஜூலை 24 துவங்கி மூன்று நாட்கள் நடைபெற உள்ள இதில், பல்வேறு வகையான சொகுசு கார்கள், சூப்பர் பைக்குகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வாகனங்கள் என 25 க்கும் மேற்பட்ட முன்னனி நிறுவனங்களின் கார்கள், பைக்குகள் காட்சிப்படுத்தப்பட்டன. வாகனங்களின் நவீன வடிவமைப்பு, தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் செயல்திறன் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான கார் மற்றும் பைக் ஆர்வலர்கள், இளைஞர்கள், குடும்பத்தினருடன் கலந்து கொண்டு வாகனங்களை பார்வையிட்டு ரசித்தனர். பலர் தங்களது வாகனங்களையும் காட்சிக்கு கொண்டு வந்து மோட்டார் வாகனங்கள் மீதானதங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தினர். வாகன ஆர்வலர்களுக்கு புதிய அனுபவத்தை வழங்கும் இந்த கண்காட்சியில் வார இறுதியில் கண்காட்சியை காண,குடும்பத்துடன் வருபவர்களுக்கு கண்டு களிக்க ஏராளமான பொழுது போக்கு அம்சங்களுடப், குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டு போட்டிகளும்,நடத்தி பரிசுகள் வழங்கப்படுகின்றன.. மேலும் ஆடி சிறப்பு விற்பனையாக ஏராளமான சலுகைகள் வழங்கஉள்ளதாகவும்,, மோட்டார் வாகன கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்த கண்காட்சி நடத்தப்படுவதாகஏட்வேவ்ஸ் அட்வர்டைசிங் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஜெரால்டு மற்றும் புரோசோன் மால் மேலாளர் நாதன் ஆகியோர் தெரிவித்தனர்.

சிக்கலான மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள் முதல் ரோபோடிக் முதுகுத்தண்டு சிகிச்சை வரை:

# 10,000 அறுவை சிகிச்சைகள் மேற்கொண்டு புதிய மைல்கல்லை எட்டிய நாராயணா ஹெல்த் சிட்டியின் ஈரோடு பத்திரிக்கையாளர் சந்திப்பு




ஈரோடு மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளிகள் உலகத் தரம் வாய்ந்த எலும்பியல் சிகிச்சையை தங்கள் சொந்த ஊரில் இருந்தபடியே பெறலாம்

ஈரோடு மாநகர் தென்றல் அருகே உள்ள தனியார் ஹோட்டலில் நாராயணா ஹெல்த் சிட்டி, சார்பாக பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் பெங்களூருவில் அமைந்துள்ள நாராயணா ஹெல்த் சிட்டி, கடந்த மூன்று ஆண்டுகளில் 10,000 எலும்பியல் அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, மேம்பட்ட மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, எலும்பியல் புற்றுநோய் சிகிச்சை, விபத்து காய சிகிச்சை (Trauma), முதுகுத்தண்டு சிகிச்சை மற்றும் சிக்கலான மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள் ஆகியதுறைகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த சாதனை, தசை எலும்பு (Musculoskeletal) தொடர்பான பல்வேறு நோய்கள் மற்றும் பாதிப்புகளுக்கு அதிநவீன தொழில்நுட்பம், பல்துறை மருத்துவ நிபுணர்களின் ஒருங்கிணைந்த சிகிச்சை அணுகுமுறை மற்றும் நோயாளியை மையமாகக் கொண்ட சிகிச்சை முறைகள் மூலம் உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில் மருத்துவமனையின் நிபுணத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. வளர்ந்து வரும்

ரோபோடிக் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகள், அதிநவீன இமேஜிங் தொழில்நுட்பம், நோயாளிகளுக்கேற்ப தனிப்பயனாக்கப்பட்ட இம்ப்ளாண்ட்கள் மற்றும் முழுமையான மறுவாழ்வு (Rehabilitation) நடைமுறைகளின் ஆதரவுடன், நாராயணா ஹெல்த் சிட்டியின் எலும்பியல் துறை அதிக சிக்கலான நோயாளிகளுக்கும் உயர்ந்த அறுவைச் சிகிச்சை துல்லியத்துடன் சிகிச்சை அளித்து வருகிறது. இதன் மூலம் சிறந்த செயல்திறன் கொண்ட சிகிச்சை முடிவுகள் மற்றும் விரைவான குணமடைதல் உறுதி செய்யப்படுவதோடு, ஈரோடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த எலும்பியல் சிகிச்சையை அவர்களின் இருப்பிடத்திற்குஅருகிலேயேவழங்க வேண்டும் என்ற தனது உறுதிப்பாட்டையும் மருத்துவமனை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்த மருத்துவ நிபுணத்துவம், சமீபத்தில் மருத்துவமனையில் வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட்ட பல்வேறு சிக்கலான மற்றும் உயர் சவால்கள் நிறைந்த

அத்தகைய ஒரு சவாலான வழக்கில், முழங்கால் பகுதியில் தொடர்ந்து வலி மற்றும் வீக்கத்தால் பாதிக்கப்பட்ட 7 வயது சிறுமி நாராயணாஹெல்த் சிட்டியில் அனுமதிக்கப்பட்டார். ஆரம்பத்தில் எலும்புத் தொற்று எனக் கருதி வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்த நிலையில், மேற்கொள்ளப்பட்ட திசுப் பரிசோதனையில் (Tissue Analysis), தீவிர தன்மை கொண்ட எலும்புப் புற்றுநோயான Osteosarcoma இருப்பது உறுதி செய்யப்பட்டது. கீமோதெரபி சிகிச்சையில் சிறப்பான முன்னேற்றம் கண்டதைத் தொடர்ந்து, புற்றுநோய்க் கட்டியை முழுமையாக அகற்றுவதோடு, எதிர்காலத்தில் காலின் இயல்பான செயல்பாட்டையும் பாதுகாக்கும் வகையில் அந்தச் சிறுமிக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சிறுமியின் இளம் வயதையும், எதிர்காலத்தில் எலும்பு வளர்ச்சி கணிசமாக இருக்கும் என்பதையும் கருத்தில் கொண்டு, வழக்கமாக பயன்படுத்தப்படும் கட்டி மாற்று

செயற்கை மூட்டு (Tumour Prosthesis) பொருத்துவது பொருத்தமானதாக இருக்கவில்லை. அவ்வாறு செய்திருந்தால், காலப்போக்கில் இரு கால்களின் நீளத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு ஏற்படும் அபாயம் இருந்தது. இந்த சவாலை சமாளிக்கும் வகையில், நாராயணா ஹெல்த் சிட்டியின் எலும்பியல் புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள், ஜெர்மனியில் சிறப்பாக தயாரிக்கப்பட்டு, சிறுமியின் எதிர்கால உடல் வளர்ச்சிக்கு ஏற்ப விரிவடையும் தன்மை கொண்ட, அறுவைச் சிகிச்சையின்றி நீளத்தை அதிகரிக்கக்கூடிய (Non-invasive Expandable tumour prosthesis) தனிப்பயனாக்கப்பட்ட கட்டி மாற்று செயற்கை மூட்டை வெற்றிகரமாக பொருத்தினர். அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில், அந்தச் சிறுமி முழுமையாக நலமுடன் வாழ்ந்து வருவதோடு, அவரது கால் வெற்றிகரமாக பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும், அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட காலின் செயல்திறனும், இயல்பான வளர்ச்சியும் சிறப்பாக தொடர்ந்து வருகிறது.

நாராயணா ஹெல்த் சிட்டியின் மூத்த ஆலோசகர் - எலும்பியல் துறை, டாக்டர் சுமன் எம். பைரேகவுடா கூறுகையில், "குழந்தைகளுக்கு ஏற்படும் எலும்புப் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிப்பதில், புற்றுநோய்க் கட்டியை முழுமையாக அகற்றுவதுடன், எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட உறுப்பின் செயல்திறனையும் இயல்பான வளர்ச்சியையும் பாதுகாப்பது மிக முக்கியமான சவாலாகும். இந்தச் சிறுமியின் வழக்கில், தனிப்பயனாக்கப்பட்ட விரிவடையும் செயற்கை மூட்டு (Expandable Prosthesis) பொருத்தப்பட்டதன் மூலம், அவரது காலை பாதுகாப்பதோடு, அது இயல்பாக வளரவும் வழிவகுத்தோம். சில தசாப்தங்களுக்கு முன்பு, எலும்புப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு கால் அல்லது கை அகற்றும் (Amputation) அறுவைச் சிகிச்சை மட்டுமே தீர்வாக இருந்தது. ஆனால் இன்று, கீமோதெரபி, அறுவைச் சிகிச்சை நுட்பங்கள் மற்றும் இம்ப்ளாண்ட் தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களால், சுமார் 60 முதல் 80 சதவீத நோயாளிகளை முழுமையாக குணப்படுத்த முடிகிறது. மேலும், 90 முதல் 95 சதவீதத்திற்கும் அதிகமான நோயாளிகளுக்கு உறுப்பைப் பாதுகாக்கும் (Limb Salvage) அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடிகிறது. எலும்புப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், சரியான நேரத்தில் சிகிச்சையைத் தொடங்குதல் மற்றும் பல்துறை மருத்துவ நிபுணர்கள் இணைந்து வழங்கும்சிகிச்சைஅணுகுமுறை ஆகியவையே சிறந்த சிகிச்சை பலனைப் பெறுவதற்கான முக்கிய காரணிகளாகும்," என்றார்.

மற்றொரு சிக்கலான வழக்கில், வீட்டு வேலை செய்து தனது வாழ்வாதாரத்தை நடத்தி வந்த 55 வயதுடைய பெண் ஒருவர், சுமார் 20 ஆண்டுகளாக இரு முழங்கால்களிலும் ஏற்பட்டிருந்த மூட்டுவாத (Bilateral Knee Arthritis) பாதிப்பால் கடுமையாக அவதிப்பட்டு நாராயணா ஹெல்த் சிட்டியை அணுகினார். காலப்போக்கில் முழங்கால் வலி தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்து, அன்றாட வீட்டு வேலைகளைச் செய்வதற்கே பெரும் சிரமம் ஏற்பட்டதுடன், அவரது வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் நிலை உருவானது. இளமைப் பருவத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக, அவரது வலது முழங்காலில் கடுமையான வடிவமாற்றம் (Deformity) ஏற்பட்டிருந்தது. இதன் விளைவாக, சிறிய தூரம் கூட நடப்பதும், உடல் உழைப்பு தேவைப்படும் பணிகளை மேற்கொள்வதும் மிகவும் கடினமாக இருந்தது. முழுமையான மருத்துவ மற்றும் கதிரியக்க (Radiographic) பரிசோதனைகளுக்குப் பிறகு, அவருக்கு சிக்கலான ரோபோடிக் உதவியுடன் மேற்கொள்ளப்படும் முதன்மை முழங்கால் மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை (Complex Primary Robotic-Assisted Knee Replacement) வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அதிநவீன ரோபோடிக் தொழில்நுட்பத்தின் உதவியுடன், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் செயற்கை மூட்டுகளை மிகத் துல்லியமாக பொருத்தியதோடு, நோயாளியின் இயல்பான நடமாட்டத்தையும் அன்றாட செயல்பாடுகளையும் பாதித்திருந்த கடுமையான முழங்கால் வடிவமாற்றத்தையும் வெற்றிகரமாகச் சரி செய்தனர். அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட அதே நாளிலேயே நோயாளி உதவியுடன் நடக்கத் தொடங்கினார். மேலும், ஆரம்ப கட்டத்திலிருந்தே அவருக்கு பிசியோதெரபி (Physiotherapy) சிகிச்சை வழங்கப்பட்டது. மூன்று நாட்களுக்குள் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய அவர், வாக்கர் உதவியுடன் சுயமாக நடப்பதுடன், அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்ளும் நிலையை அடைந்தார். தொடர்ச்சியான பிசியோதெரபி பயிற்சிகளின் மூலம், அவரது உடல்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு ஒரு மாதத்திற்குள் எந்த சிரமமும் இன்றி சுயமாக நடக்கும் திறனை மீண்டும் பெற்றார். தற்போது முழங்கால் வலி முற்றிலும் நீங்கி, வீட்டு வேலைகள் அனைத்தையும் தன்னம்பிக்கையுடன் மேற்கொள்வதுடன், தனது வாழ்வாதாரத்தைத் தொடர மீண்டும் பணிக்குச் செல்லும் நிலையை எட்டியுள்ளார்.

நாராயணா ஹெல்த் சிட்டியின் எலும்பியல் துறை ஆலோசகர் டாக்டர் பிரதாப் கூறுகையில், "ரோபோடிக் உதவியுடன் மேற்கொள்ளப்படும் மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை, மிகவும் சிக்கலான முழங்கால் மாற்று அறுவைச் சிகிச்சைகளைக் கூட மிக உயர்ந்த துல்லியத்துடன் மேற்கொள்ள உதவுகிறது. அதே நேரத்தில், ஆரோக்கியமான எலும்புகள் மற்றும்மென்மையானதிசுக்களை (Soft Tissue) முடிந்தவரை பாதுகாக்கவும் இது வழிவகுக்கிறது. இதன் மூலம் செயற்கை மூட்டுகளை மிகவும் துல்லியமாக பொருத்த முடிவதுடன், அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய வலி குறைவது, நோயாளி விரைவாக நடமாடத் தொடங்குவது, மறுவாழ்வு (Rehabilitation) விரைவாக நடைபெறுவது மற்றும் நீண்டகால செயல்திறன் மேம்படுவது போன்ற பல நன்மைகள் கிடைக்கின்றன. பல ஆண்டுகளாக கடுமையான வலி மற்றும் மூட்டு வடிவமாற்றத்தால் அவதிப்பட்டு வந்த நோயாளிகளுக்கு, அவர்களின் இயல்பான நடமாட்டத்தையும் வாழ்க்கையையும் மீட்டெடுத்து வழங்குவது, அவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது," என்றார். சுயசார்பு

கடந்த மூன்று ஆண்டுகளில் 10,000 எலும்பியல் அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள நாராயணா ஹெல்த் சிட்டி, மேம்பட்ட எலும்பியல் சிகிச்சைக்கான சிறப்புமிக்க மருத்துவ மையமாக தனது நிலையை மேலும் வலுப்படுத்தி வருகிறது. மூட்டு மாற்றுஅறுவைச்சிகிச்சை, எலும்பியல் புற்றுநோய் சிகிச்சை, விபத்து காய சிகிச்சை (Trauma) மற்றும் சிக்கலான மறுசீரமைப்பு அறுவைச் சிகிச்சைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், மருத்துவ நிபுணத்துவம், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் பல்துறை மருத்துவ நிபுணர்களின் ஒருங்கிணைந்த அணுகுமுறையை இணைத்து, நோயாளிகளுக்கு உயர்தர சிகிச்சை பலன்களை மருத்துவமனை தொடர்ந்து வழங்குவதில் முன்னிலை வகித்து வருகிறது என்று தெரிவித்தனர்



## தூத்துக்குடி தொழில் வளர்ச்சி கலந்துரையாடல் கூட்டம்: அமைச்சர் ஸ்ரீநாத் பங்கேற்பு

தூத்துக்குடியில் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கம் (ICCI), தூத்துக்குடி சார்பில் "தொழில்துறையில் முன்னேறிய மாவட்டமாக உருவெடுத்து வரும் தூத்துக்குடி" என்ற தலைப்பில் கலந்துரையாடல் கூட்டம், தூத்துக்குடி மாடத்தூர் பைபாஸ் சாலையில் உள்ள ICCI கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், தமிழக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் மற்றும் மனிதவள மேலாண்மை மற்றும் முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை அமைச்சர் டி. சரத்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று உரையாற்றினர்.

கூட்டத்தில், தூத்துக்குடி மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி, புதிய முதலீட்டு வாய்ப்புகள், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தொழில் சார்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்துதொழில்முனைவோர், வணிகர்கள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகளுடன் விரிவான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

மேலும், 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு ICCI தலைவர் டி.ஆர். கோடீஸ்வரன் தலைமை வகித்தார். செயலாளர் கே. பொன்வெங்கடேஷ் முன்னிலை வகித்தார். தொழில்துறையினர், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## 11 மாதங்களாக தொடரும் அன்னதான சேவை – விருத்தாசலம் பழமலைநாதர் கோவிலில் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கிய சமூக ஆர்வலர் இளையராஜா

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் திருக்கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தருகின்றனர். இக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் பசியைப் போக்கும் உயரிய நோக்கில், சமூக ஆர்வலரும், பாஜக மாவட்ட ஓபிசி அணி பொதுச் செயலாளருமான எ. கொளப்பாக்கம் இளையராஜா கடந்த 11 மாதங்களாக இடையறாது அன்னதான சேவையை மேற்கொண்டு வருகிறார்.

ஓம் சக்தி குரூப்ஸ் & ரியல் எஸ்டேட், எர்த் மூவர்ஸ், நெல் அறுவடை இயந்திர சேவை உள்ளிட்ட பல்வேறு தொழில் நிறுவனங்களை நடத்தி வரும் அவர், சமூகப் பொறுப்புணர்வுடன் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் அன்னதானம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த சேவையின் மூலம் கோவிலுக்கு வருகை தரும்நூற்றுக்கணக்கான பக்தர்கள் தொடர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, ஜூலை 25-ஆம் தேதி சனிக்கிழமையன்று நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியில் 100-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு சுவையான மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த மனிதநேய சேவையை பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டி, இதுபோன்ற அறப்பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## Internet, metro, liquor shops: What is restricted in Delhi amid CJP protest



Leader of the Opposition in the Lok Sabha Rahul Gandhi on Saturday launched a sharp attack on Prime Minister Narendra Modi amid the ongoing NEET protests, describing him as India's "past" while calling the protesting students the country's "future" and asserting that the Prime Minister could not defeat them.

Speaking to reporters, Gandhi alleged that the government machinery was being used against the protesting students but urged them to remain steadfast in their agitation.

According to Delhi government officials, the decision to reduce liquor shop timings was taken based on inputs from Delhi Police, which flagged the need for additional preventive measures to maintain law and order in the central Delhi area, reported PTI.

Officials said the temporary change in operating hours is aimed at preventing any untoward incidents during the protest period. A similar situation was witnessed on Thursday, when several liquor shops across the city were shut earlier than usual without any prior public announcement. The unexpected closure left many customers unable to purchase liquor and forced them to return empty-handed.

According to officials, the early closure of liquor vends is purely a precautionary measure and is part of the government's efforts to ensure public safety and maintain law and order during the ongoing demonstrations.

Eighteen Delhi Metro stations in central Delhi were closed on Saturday, fourth straight day of such closure due to security concerns amid the ongoing CJP protest near Jantar Mantar, officials said.

According to the Delhi Metro Rail Corporation (DMRC), the stations remain closed from 7.30 am until further instructions. However, interchange facilities will be available at Rajiv Chowk, Mandi House and Central Secretariat stations.

## தூத்துக்குடி போலீஸ் விசாரணையில் உயிரிழந்த அருணாச்சலம் குடும்பத்தினருக்கு தே.மு.தி.க. சார்பில் நிதியுதவி – மாவட்ட செயலாளர் தயாளாலிங்கம் ஆறுதல்



தூத்துக்குடி தென்பாகம்காவல்நிலையவிசாரணைக்குப் பின்னர் உயிரிழந்ததாகக் கூறப்படும் இளைஞர் அருணாச்சலத்தின் குடும்பத்தினருக்கு, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் (தே.மு.தி.க.) தூத்துக்குடி மாவட்ட செயலாளர் தயாளாலிங்கம் நேரில் சென்று ஆறுதல்தெரிவித்து நிதியுதவி வழங்கினார்.

தூத்துக்குடி மாநகராட்சி 50-வது வார்டு, அமுதாநகர்முதல்தெருவைச் சேர்ந்த நாகராஜின் மகன் அருணாச்சலம் (24), சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்ததாகக் கூறி காவல்துறையினர்விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். காவல் நிலைய விசாரணையின்போது உடல்நலக்குறைவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், அருணாச்சலம் காவல்துறையினரின் தாக்குதலால் உயிரிழந்ததாக அவரது உறவினர்கள் குற்றம்சாட்டி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், உயிரிழந்த அருணாச்சலத்தின் இல்லத்திற்குச் சென்ற தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் தயாளாலிங்கம், அவரது தாயாருக்கும் குடும்பத்தினருக்கும் ஆறுதல்தெரிவித்து நிதியுதவி வழங்கினார். மேலும், இந்த சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தி, உண்மை வெளிவர வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், பகுதி செயலாளர் அரசமுத்து, மாவட்ட அவைத்தலைவர் அலெக்சாண்டர், மாவட்ட துணைச் செயலாளர்கள் லிவிங்ஸ்டன் மற்றும் சம்சுதீன், மாவட்ட பொருளாளர் ராஜன், பகுதி செயலாளர்கள் வல்லரசு துரை மற்றும் நாராயணமூர்த்தி, தொழிற்சங்க செயலாளர் ராதாகிருஷ்ணன், வட்ட செயலாளர் ராஜா, முத்தையாபுரம் பகுதி பொறுப்பாளர் அந்தோணிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.